**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**

**M.C.O.P.No. 244/2018**

**தேதி : 21.07.2025**

**(ம.சா.1) : திரு . வேலுச்சாமி**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி: –</u> பின்வரும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | : | முதல் தகவல் அறிக்கை |
| ம.சா.ஆ.2 | : | மதுரை ராஜாஜி மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவக்குறிப்பு நோட்டு. |
| ம.சா.ஆ.3 | : | 1ம் எதிர்மனுதாரர் வாகன பதிவுச்சான்று |
| ம.சா.ஆ.4 | : | காப்பீட்டுச்சான்று |
| ம.சா.ஆ.5 | : | என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) |

**மனுப்படி உத்தரவாக கேட்டுக்கொள்கிறேன்.**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>**

**1. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு கல்வியறிவு கிடையாது. நான் கொடுத்த எழுத்துப்பூர்வமான தகவலின் அடிப்படையில்தான் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் 20.08.2018 அன்று மாலை 7.15 மணிக்கு பழனி–திண்டுக்கல் ரோட்டில் ஓபுளாபுரம் இஞ்சி டீக்கடை அருகில் வரும்போது ரோட்டை தெற்கிலிருந்து வடக்காக நடந்து கடக்க முயன்றபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டதாக மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.**

2. விபத்து சம்பந்தமாக மாதிரி வரைபடம் மற்றும் குற்ற அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மோட்டார் சைக்கிள் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வடக்குப்பக்கம் வந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். நான் மேற்கிலிருந்து வடக்குப்பக்கமாக போகும்போது இந்த விபத்து நடந்தது என்றால் நான் சாலையை கடந்து முடித்தபோது விபத்து நடந்தது. நான் வடக்கு ஓரத்துக்கு வந்துவிட்டேன். நான்தான் சாலையை கடக்க முயன்றபோது விபத்து ஏற்பட்டது என்றும், வாகனம் இடதுபுற ஓரமாக வந்தது என்றும், நான் கவனித்து சாலையை கடந்திருந்தால் விபத்து ஏற்பட்டிருக்காது என்றும் சொன்னால் சரியல்ல.

3. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. உடனடியாக பழனி அரசு மருத்துவமனைக்கு சென்றதாக சொல்வதற்கு விபத்துப்பதிவேடு நகல் மற்றும் காயச்சான்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. டிஸ்சார்ஜ் சம்மரியில் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் என்னை விசாரித்து விபரங்கள் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். 21.01.2019 அன்று எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் என்னை விசாரித்து நான் மது அருந்துபவர் என்றும், தீவிர புகைப்பிடிப்பவர் என்றும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான்.

4. நான் விபத்து நடந்தவுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, கடைசியாக 01.12.2021 அன்று வெளிநோயாளியாக சிகிச்சைக்காகச் சென்றபோது மருத்துவரால் எக்ஸ்ரே எடுக்கப்பட்டு, எலும்பு முறையாக சேர்ந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். 03.04.2023 அன்று வெளிநோயாளியாக நான் சிகிச்சைக்கு சென்றேன். அதன்பின்பு தொடர் சிகிச்சை எதுவும் பெற்றுக்கொள்ளவில்லை. எனக்கு அரசு மருத்துவமனையில் அளிக்கப்பட்ட இலவச சிகிச்சைதான். நான் விவசாய கூலி வேலை பார்த்து அதன் மூலம் தினமும் ரூ.650/- சம்பாதித்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர்

**வாகனத்தின் ஓட்டுனருக்கு எவ்வித ஓட்டுனர் உரிமமும் இல்லை என்றும், மோட்டார் வாகனச் சட்டத்தின்படியும், பாலிசியின்படியும்விதிமுறை மீறல்கள் இருப்பதால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்தக்கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.**

**<u>மறு விசாரணை :-</u>** **இல்லை.**

K. BHARATHI
Digitally signed by K. BHARATHI
Date: 2025.07.21 15:53:42 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**